**சிறப்பு சார்பு நீதிமன்றம், (மோட்டார் வாகன விபத்து இழப்பீடு தீர்ப்பாயம்)**
**திருப்பத்தூர், திருப்பத்தூர் மாவட்டம்**
**MCOP . No.4/2024**

**நாள் : 27.02.2026**

**ம.சா.** 1 திரு.ஹரி

2ஆம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை

விபத்து சமயத்தில் நான் இருசக்கர வாகனத்தை ஓட்டிச் சென்றேன் என்றால் ரயில்வே கேட் போடப்பட்டிருந்ததால் வண்டியை நிறுத்தி அமர்ந்திருந்தேன். மேற்படி வாகனத்தில் நானும், எனது மனைவியும், 2 குழந்தைகளும் போனோம். ஆக மொத்தம் 4 பேர் பயணித்தோம் என்றால் சரிதான். எனது சிறிய குழந்தை முன்னாலும், மற்றொரு குழந்தையும் பின்சீட்டிலும் அமர்ந்திருந்தது. இருசக்கர வாகனத்தில் 4 பேர் பயணித்ததால்தான் நிலை தடுமாறி கீழே விழுந்து விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. எனக்கு ஓட்டுநர் உரிமம் உள்ளது. அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். (அது ம.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது) நான் மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக்கொண்டதற்கான ஆவணத்தை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனக்கு வண்டி வாகனத்தை பழுதுபார்த்ததற்காக ரூ.18,737/- செலவானதாக ம.சா.ஆ.2 பில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். எனக்கு ஆங்கிலம் எழுத படிக்க தெரியும். எனது வாகனத்தை நான் மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகத்திற்கு எடுத்துச்சென்று ஆய்வுக்கு உட்படுத்தி சேதாரங்களை காண்பித்துவிட்டு எடுத்து வந்தேன் என்றால் சரிதான். என்னுடன் போலீசாரும் வந்தார்கள். ம.சா.ஆ.7 மோட்டார் வாகன ஆய்வறிக்கையில் head light scratched என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். Front both indicator broken என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். Front left rear mirror broken என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி 3 சேதாரங்களை தவிர வேறு எந்த சேதாரமும் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். ம.சா.ஆ.2 ஆவணத்தில் சீட் கிழிந்துவிட்டதாகவும் சக்கரம் வளைந்துவிட்டது என்றும், செயின்

அறுந்துவிட்டது என்று கூடுதலான சேதாரங்கள் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி சேதாரங்களை வழக்கிற்காக மிகைப்படுத்தி ம.சா.ஆ.2ல் கண்டுள்ளது என்றால் சரிதான். எனது வாகனத்திற்கு காப்பீடு உள்ளது என்றால் சரிதான். எனது வாகனத்திற்கு இன்சூரன்ஸ் இருப்பதால் கம்பெனி மூலமாக சர்வீஸ் செய்ய முயற்சி செய்தேனா என்றால் இல்லை. விபத்தில் காயம் ஏற்பட்டதால் இழப்பீடு கோரி மனு தாக்கல செய்துள்ளேன். எனது வாகனத்திற்கு ஏற்பட்ட சேதாரங்கள் மிகவும் சொற்பமானவை என்றால் சரியல்ல. அதற்குண்டான செலவினங்கள் ரூ.1000/– வரைதான் இருக்கும் என்றால் சரியல்ல. வழக்கிற்காகவேண்டி கூடுதலாக செலவானதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. விபத்து எனது அஜாக்கிரதையால் ஏற்பட்டதால் 2ஆம் எதிர்மனுதாரர் நிறுவனம் இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டது அல்ல என்றால் சரியல்ல.

ஒம்/. J. நாகலட்சுமி @ விஜயராணி,
சிறப்பு சார்பு நீதிபதி (MACT),
திருப்பத்தூர்.